முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1616

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.03.2024**, சனிக்கிழமை

1. மாறுதலை கலியினில் நடத்த
மாதவசியாக வந்த அரங்கனே
ஆறுமுகன் என் அவதார ஞானியே
அப்பனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
அருளுவேன் சோபகிருது சால் திங்கள் தன்னில்
தன்னிலே அரங்கனுக்கு மாதவசக்தியை
தண்டாயுதன் யான் நித்தம் பிரம்ம வேளையில்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 19 ம் நாள், 02.03.2024, சனிக்கிழமை)
3. வேளைதனில் ஆற்றலாக மகா சக்தியாக
அளவிலா தொடர்ந்து வழங்கி வர
மாற்றமதும் அரங்கன் சக்திவழிதான்
மக்களுக்கு ஞானமெனும் பேராற்றலாக
4. பரவியே சடுதி சிறந்து
பழுதின்றி உலகமெங்கும் ஞானவான்கள் படை
தகுதி கூடி மக்களிடை
தனிப்பெரும் கருணை வடிவாக
5. ஆகவே உருமாறி ஆங்காங்கே
அளவிலா அறம் பெருகி உலகோர் பசிபிணி நீக்கி
நீக்கியே பேருலகமெல்லாம் தயவு
நிறைந்த பிரம்ம ஞானம் உணர்ந்த மக்களாக
6. ஆகவே அன்பர்கள் மாற்றம் கண்டு அகிலத்தில் ஞானவான்கள் படை
வகையாக எங்கும் பெருகி இனிதே வையகம் ஞானலோகமாகும்
ஆகுமப்பா அரங்கன் தர்மத்தால்
அகிலமே தர்மலோகமும் ஆகி

7. வகையான ஞானவான்களை தேர்வு செய்கின்ற
வல்லமையான அறிவு தெளிவு கூடி
மிகையான மாந்தர்கள் எங்கும் நிரம்ப ஞானசபை
மொழிகுவேன் இவ்வுலகம் கண்டு

8. கண்டுமே அரங்கனால் ஞான ஆட்சி
கலியுகத்தில் அரங்கேறக் கூடும்
தொண்டுவழி இணைகின்ற அன்பர்களெல்லாம்
தேசிகனால் ஞானிகளாக உருமாற்றப்படும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–